
கட்டுரை

பாவலர் மணி ஆ. பழநி



அன்றைய மதுரையும் இன்றைய மதுரையும்

மதுரை என்ற பெயர் இலக்கியத்திலும் வரலாற்றிலும் நிலைபெற்ற பெயர். தமிழ், தமிழர் வாழ்வியலில் முத்திரை பதித்த ஒரு பெயர். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியப் பேரரசின் தலைநகரத்தின் பெயர். தமிழர்தம் கலையும், நாகரிகமும், பண்பாடும் செழித்து வளர்ந்த நாற்றங்காலின் இன்னொரு பெயர்தான் மதுரை என்பது. அன்று முதல் இன்று வரை பெயர் மாறாது வாழும் - வளரும் நகரமாகவும் விளங்குவது மதுரையே. இம் மதுரை மாநகரம் தொடக்க முதல் இன்றுள்ள இடத்தில்தான் இருந்து வருகின்றதா? இடம் மாறினாலும் பெயர் மட்டும் மாறாது நிலைத்து நிற்கின்றதா? என்ற வினாக்கள் ஆய்வாளர்களின் இடையில் தோன்றியுள்ளன. ஏன் இந்த ஐயம்? இலக்கியங்களில் காணப்படும் செய்திகள்தாம் இவ்வையத்தைத் தோற்றுவிக்கின்றன. இதுபற்றி இனிக் காண்போம்.

திருமுருகாற்றுப்படை கீழ்க்கண்டவாறு கூறுகின்றது :

மாடமலி மறுகின் கூடற் குடவயின்
....
குன்றமாந் துறைதலும் உரியன். 72-77

(மாடங்கள் நிரம்பிய தெருவுகளை உடைய மதுரை மாநகரின் மேற்கில் உள்ள திருப்பரங்குன்றத்தில் முருகன் உறைகின்றான்)



திருமுருகாற்றுப்படை என்ன சொல்கிறது?

மதுரையின் மேற்கில் திருப்பரங்குன்றம் இருந்தது என்று மதுரையின் அமைவிடத்தை வரையறுக்கின்றது. திருப்பரங்குன்றத்தின் நேர் கிழக்கில்தான் மதுரை இருந்தது என அறிகின்றோம். இதே கருத்தை சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூறும் உறுதி செய்கின்றது.

'கொடிநுடங்கு மறுகின் கூடற் குடாஅது

....

ஒடியா விழவின் நெடியோன் குன்று'.

அகம் 149

(கொடிகள் அசையும் தெருவுகளையுடைய மதுரையின் மேற்கில் விழாக்கள் நிரம்பிய நெடியோன் (முருகன்) குன்றம் உள்ளது.)

ஆக, இரண்டு நூல்களும் மதுரையின் மேற்கில்தான் பரங்குன்று இருந்தது என்றும், பரங்குன்றின் கிழக்கில்தான் மதுரை இருந்தது என்றும் உறுதியாகக் கூறுகின்றன. இன்று மதுரையும் பரங்குன்றும் எத்திசையில் அமைந்துள்ளன? மதுரையின் தென்மேற்கில்தான் பரங்குன்றம் இருக்கின்றது. திருப்பரங்குன்றத்தின் வடகிழக்கில்தான் மதுரை இருக்கின்றது.

ஆறுகளை வைத்து இடங்களின் திசைகளை நாம் வரையறுக்க முடியாது. ஏனெனில், ஆறுகள் காலப்போக்கில் திசைமாறி ஓடக் கூடியவை. ஆனால், மலைகள் திசைமாறி ஓடக் கூடியன அல்ல. ஆதலின் திருப்பரங்குன்றமலையின் கிழக்கில் மதுரை இருந்தது என்ற இலக்கியங்களின் கூற்று மாறா உண்மையாகவே இருக்க வேண்டும். இது மாறா உண்மைதான் என்று ஏற்றுக் கொண்டால் இன்றைய மதுரை பழைய அமைவிடத்தில் இல்லை என்பதையும், அதனின்றும் வடக்கில் இடம் பெயர்ந்து விட்டது என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஒப்புக் கொண்டால் பரங்குன்றின் வடகிழக்கில் மதுரை இருப்பது சரிதான் என்ற முடிவிற்கு வரலாம்.

சங்க இலக்கியம் கூறும் இச் செய்தியைச் சிலப்பதிகாரம் ஒப்புக் கொள்கின்றதா எனக் கேட்டால், ஆம்! ஒப்புக் கொள்கின்றது என்றுதான் கூற வேண்டும். பரங்குன்றின் நேர் கிழக்கில்தான் மதுரை இருந்தது என்பதைச் சிலம்பும் ஒப்புக் கொள்கின்றது. ஆனால், இதனை நேரிடையாகச் சொல்லாமல் நிகழ்ச்சிகளால் வெளிப்படுத்துகின்றது. இப்பொழுது நாம் அந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திப் பார்ப்போம். சிலம்பு கூறும் நிகழ்ச்சிகளாவன:

1. மதுரைக்கு வடக்கே வையையாறு ஓடியது. இங்கேதான் கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் வந்து சேர்கின்றனர்.

2. கண்ணகி கவுந்தி ஆகியோர் வையையின் வடகரையில் இருந்து ஒரு புணையில் (தெப்பத்தில்) ஏறி வையையின் தென்கரையை அடைகின்றனர்.

3. மதுரையின் அகழி காவற்காட்டை ஆடையாக உடுத்து நின்றது. அவர்கள் மூவரும் அக்காவற்காட்டுள் நடந்து சென்றனர்.

4. காவற்காட்டுக்குள் சென்றபோது கழனிகளிலும், நீர்நிலைகளிலும் பூத்திருந்த குவளை, ஆம்பல், கமலம் போன்ற மலர்களையும் அவற்றில் தேன் குடித்த வண்டுகளையும் கண்டு சென்றனர்.

5. அவ்வாறு செல்லுங்கால் தொலைவில் மதிலின் உச்சியில் அசைந்தாடிய கொடிகள் 'வரவேண்டா' என்பதுபோற் கைகை செய்தன.

6. இதன் பின்னர் வெள்ள நீர் நிரம்பிய ஓடைகளையும், விரிந்து பரந்த ஏரிகளையும் கடந்து சென்றனர்.

7. இதன் பின்னர் தென்னந் தோப்புகளும், வாழைத் தோட்டங்களும் கமுகுத் தோட்டங்களும் சூழ்ந்திருந்த நிலப் பகுதியில் மூங்கிற் புதர்களே பந்தல்போல் அமைந்திருந்த புறஞ்சேரியை அடைந்தனர்.

8. புறஞ்சேரி மதுரை கிழக்குவாயிலின் கிழக்கே காவற் காட்டுள் அமைந்திருந்தது.

கண்ணகி, கோவலன், கவுந்தி மூவரும் வையையில் வடகரையில் இருந்து ஒரு புணையில் ஏறித் தென்கரையை அடைந்த பின்னர் காவற்காட்டுக்குள் நுழைகின்றனர். காவற்காடு என்பது செறிவும் நுழைதற்கு அருமையும் அமைந்த முள்மரங்கள் அடர்ந்த பகுதியாகும். இது பகைவர் படை கொண்டு

வந்தால் எளிதில் மதிலை அடைய விடாமல் தடுப்பதற்காகவே அமைக்கப்படுவது. ஆதலின் இக்காடு நான்கைந்து கல் தொலைவிற்குப் பரந்துபட்டதாக இருக்கும். சிறிய நிலப்பரப்பில் இக்காடு அமைந்திருந்தால் பகைவர் எளிதில் ஊடுருவி மதிலை முற்றி விழுவர். ஆகவே இக்காடு விரிந்து பரந்ததாகவே அமைந்திருக்க வேண்டும். ஓர் ஐந்து கல் தொலைவாவது இருந்திருக்கும்.

'பெரிய முள் மரக் கூட்டங்கள் சூழ அமைக்கப்படுவது காட்டரண் ஆகும்' இவ்வாறு சுக்கிர நீதி (அத்.4. பிர.6. சூத்3) கூறுவது இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

காவற் காட்டுட் சென்றபோது ஆங்கிருந்த நீர் நிலைகளில் பூத்திருந்த குவளை, ஆம்பல், கமலம் போன்ற மலர்களைக் கண்டனர் என நான் கூறியிருப்பதைச் சிலர் மறுக்கக் கூடும். குவளையும் ஆம்பலும், கமலமும் பூத்திருந்தது அகழியில்தானே அன்றி நீர் நிலைகளில் அன்று என மறுக்கக்கூடும். எல்லா உரையாசிரியர்களும் அகழியில் பூத்த மலர்களாகவே கருதித்தான் உரை எழுதியுள்ளனர். ஆனால், அவர்கள் மூவரும் அகழியை இன்னும் கண்ணால் பார்க்கவே இல்லை என்பதுதான் என் கருத்து.

குவளை, ஆம்பல், கமலம் ஆகியவற்றைக் கண்ட பின்னர் கோட்டையின் உச்சியில் கொடியசைவதைக் கண்டதாகக் கூறப்பட்டுள்ளது. கோட்டை மதில் உயரமானது. ஆதலின் அதனை அவர்கள் தொலைவில் வந்தபோதே பார்த்திருக்க வேண்டும். அகழியை அடையும் வரை பார்க்காமலிருக்க முடியாது. இதனைத் தொலைவில் இருந்து கண்டிருந்தால் இதைக் காணும் முன்பே அகழியில் பூத்த மலர்களின் அண்மைக் காட்சியைக் கண்டிருக்க முடியாது. அவை கண்ணீர் சிந்துவதையும், காலுற நடுங்குவதையும் அவர்கள் காண வேண்டுமானால் அவர்கள் மலரின் அருகில் இருந்திருக்க வேண்டும். கொடியை முன்னால் கண்டு அதன் பின்னர் மலர்களைக் கண்டதாக அடிகள் கூறியிருந்தால் உரையாசிரியர்கள் கூற்றை நாம் நம்பலாம். மலர்களை முதலிற் கண்டு பின்னரே கொடி அசைந்ததைக் கண்டதாகக் கூறியிருப்பதே, இம்மலர்கள் அகழியில் பூத்த மலர்கள் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி விடுகின்றது.

தொலைவிலிருந்து கொடியசைந்ததைக் கண்ட பின்னர்தான் வெள்ள நீர்ப் பண்ணையையும், விரிநீர் ஏரிகளையும், தெங்கு, கமுகு, வாழைத் தோட்டங்களையும் கடந்து சென்று புறஞ்சேரியை அடைந்தனர் என்று கூறப்படுகின்றது. அவர்கள் அகழியின் பக்கத்தில் மலர்களைக் கண்டிருந்தால் மேலே குறித்தவற்றை எல்லாம் தாண்டிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. அகழியின் ஓரமாகவே நடந்து சென்று கிழக்கு வாயிலை அடைந்திருக்க முடியும். ஆனால், அடிகள் அவ்வாறு கூறாமல் இவற்றையெல்லாம் தாண்டிச் சென்றதாக அல்லவா கூறுகின்றார்!

இதுமட்டும் அன்று. கோவலன் புறஞ் சேரியில் இருந்து 'மதுரைக்குச் சென்று வணிகர்களைப் பார்த்து வருகின்றேன்' என்று கவுந்தியடிகளிடம் கூறியவன் சென்ற பாதையை இளங்கோவடிகள் இவ்வாறு கூறுகின்றார் :

இளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த
இலங்குநீர்ப் பரப்பின் வலம்புணர் அகழியில்
பெருங்கை யானை இனநிரை பெயரும்
ஒருங்கை வீதி மருங்கிற் போகி.

14:62-65

இங்கே காவற்காட்டைக் கடந்து அகழியில் யானைகள் செல்லும் வழியில் சென்றான் என்று சொல்லப்படுகின்றது. அகழியின் கீழ்க்கரைக்கு வந்து ஆங்கிருந்த குவளை ஆம்பல் கமலம் ஆகியவற்றைக் கண்டிருந்தால், மிளைக் காட்டைக் கடந்த பின்னர் சுருங்கை வழியில் அகழியைக் கடந்தான் என்று கூறியது ஏன்? இது முரணாக அல்லவா இருக்கின்றது. இது இளங்கோவடிகள் ஆக்கிய இயற்கை முரண் அன்று உரையாளர்கள் ஆக்கி வைத்த செயற்கை முரண். இதனால்தான் கூறுகின்றேன் வடக்கு வாயிலுக்கும் கிழக்கு வாயிலுக்கும் இடைப்பட்ட வளைவுப் பகுதியில் அகழிக்குச் சற்றுத் தொலைவில் மிளைக் காட்டுப் பகுதியில் வரும்போதுதான் கோட்டை மீதாடும் கொடியைக் கண்டனர் என்கின்றேன். இவர்கள் அகழிக்கு அருகில் வந்து குவளை முதலிய மலர்களைக் காணவில்லை என்று கருதுகின்றேன்.

'வானவர் உறையும் மதுரை வலம்கொளத்

தான்நனி பெரிதும் தகவுடைத் தென்றாங்கு

அருமிறை உடுத்த அகழிசூழ் போகி.'

13:181-183

இதில் 'அகழிசூழ் போகி' என்ற தொடருக்கு 'அகழியைச் சுற்றிச் சென்று' என்று பொருள் கொள்வதைவிட கிழக்கு வாயிலின் அமைவிடமாகிய 'அகழியை அடைய வேண்டிய இலக்காகக் கருதிச் சென்று' எனப் பொருள் கோடல் பொருத்தமாக அமையும் என்று கருதுகின்றேன் (சூழ்தல் கருதுதல்). இவ்வாறு கொண்டால் மிளைக் காட்டில் இறங்கிய அவர்கள் 'அகழியை அடைவதை இலக்காகக் கொண்டு அம்மிளைக் காட்டுள் நடந்து சென்று எனப் பொருள்படும். அவ்வாறு நடந்து சென்றபோது காவற்காட்டுள் அமைந்திருந்த நீர்நிலைகளில் பூத்திருந்த குவளை, ஆம்பல், கமலம் ஆகிய மலர்களையும் கண்டனர் என்றும், அங்கிருந்து கிழக்கு வாயிலை இலக்காகக் கொண்டு தெற்கு நோக்கிச் சென்றபோது வெள்ள நீர்ப் பண்ணையையும், விரிநீர் ஏரியையும், கமுகுத் தோட்டங்களையும், வாழைத் தோட்டங்களையும் கடந்து சென்றனர் என்றும், இறுதியில் மூங்கிற் புதர்கள் சூழ்ந்த புறஞ்சேரியை அடைந்தனர் என்றும் பொருள் விரியும். இவ்வாறு கொண்டால் அவர்கள் சென்ற வழியும், புறஞ்சேரியை அடைந்ததும் முரணின்றி அமையும்.

கோவலன் மதுரை நகருட் செல்லும் முதற் செலவின்போதுதான் அகழியைக் கண்டான் என்பதும், கண்ணகி மாதரியோடு போகும்போதுதான் அகழியைக் கண்டான் என்பதும், அகழியில் அமைந்த குவளை, ஆம்பல், கமலம் ஆகியவற்றை கண்ணகி கோவலன் கண்டதாகக் கூறிய உரையாசிரியர்கள் கூற்றுப் பொருத்தமற்றது என்பதும் புலனாம். இதனை வரைபடத்தில் கண்டு தெளிக.

புறஞ்சேரி எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அடுத்த காதையாகிய ஊர்காண்காதை இவ்வாறு உறுதிப்படுத்துகின்றது :

'புறஞ்சிறைப் பொழிலும், பிறங்குநீர்ப் பண்ணையும்

இறங்குகதிர்க் கழனியும் புள்ளெழுந் தார்ப்ப.'

14:1, 2


என்பதனால் புறஞ்சேரியைச் சுற்றிலும் சோலைகளும், ஏரி குளம் போன்ற நீர்நிலைகளும், கதிர் முற்றிய விளை நிலங்களும் சூழ்ந்திருந்தன என்பதனால் புறஞ்சேரி அகழிக்கு வெளியிலும், காவற்காட்டின் உட்பகுதியிலும் அமைந்திருந்தது என்பதும், ஆய்ச்சேரியோ அகழிக்கு உட்புறத்தில் அமைந்திருந்தது என்பதும் தெளிவாக விளங்கும்.

வையையின் தென்கரையில் இருந்து கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியோர் ஏறத்தாழ ஐந்து கல் தொலைவு உள்ள மிளைக் காட்டைக் கடந்து சென்றனர் என்பதனாலும், புள்ளணி கழனியும், பொழிலும், வெள்ள நீர்ப் பண்ணை விரிநீர் ஏரியும், தெங்கு, வாழை, கமுகுத் தோட்டங்களையும் கடந்து சென்றனர் என்பதனால் இவற்றைக் கடக்கக் குறைந்தது மூன்று கல் தொலைவாவது நடந்திருக்க வேண்டும் என்பதனாலும் (ஆக மொத்தம் 5+3=8) எட்டுக் கல்லுக்கு அப்பால்தான் மதுரைக் கோட்டையின் கிழக்கு வாயில் இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். இது ஒரு உத்தேசமான மதிப்பீடுதான். இரண்டு அல்லது மூன்று கல் வித்தியாசம் இருந்தாலும் இருக்கலாம். வையையின் தென்கரையில் இருந்து கிழக்கு வாயில் சற்றொப்ப எட்டுக்கல் தொலைவு என்பது வெறும் ஊகமன்று, உண்மைதான்.

மிகச் சிறந்த வரலாற்றறிஞரும், நடுநிலையோடு எதனையும் கண்டு கூறும் இயல்பும் உடையவராகிய திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் 'சங்ககாலத்து மதுரை' என்ற கட்டுரையில் வேறுவிதமாகக் கூறுகின்றார். அவர் கூறுவனவற்றைக் காண்போம்.

'சங்க காலத்து மதுரை மாநகரம் இப்போதைய மதுரை இருக்கின்ற இடத்தில் இருக்கவில்லை. அது வையையாற்றின் தென்கரையில் திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கே இருந்தது.'

'மதுரை மாநகரம் வையையாற்றின் தென்கரையில் இருந்தது என்பது கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மதுரைக்குச் சென்றபோது வையையாற்றை ஓடத்தினால் கடந்து தென்கரை சென்று மதுரையை அடைந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதனால் அறியலாம்.'



'வையையாற்றைக் கடந்து தென்கரையை அடைந்த உடனேயே வடக்கு வாயில் வழியாக நகரத்திற்குள் செல்ல முடியாது. ஏனென்றால் வடக்கு வாயில் எப்போதும் அடைபட்டிருந்தது (படம் காண்க). வடக்குப் புறத்தில் வையையாறு கோட்டை மதிற்சுவரை ஒட்டிச் சென்றது.'

'வந்து மதுரை மதில்பொரூஉம் வான்மலர்த்தாய்

அந்தண் புனல்வையை யாறு.' பரிபாடல். 12

....

'வையைதன்

நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்

போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்'. கலி. 67

பரிபாடல், கலி பாடல்களால் வையை, வடபகுதியில் கோட்டை மதிலைத் தொட்டுக் கொண்டு ஓடியதை அறியலாம் என்கின்றார். இதனால் வடக்கு வாயில் அடைபட்டே இருந்தது என்றும் கூறுகின்றார்.

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் கருத்துக்களை மேலே கண்டோம். சங்ககால மதுரை இன்றுள்ள மதுரை அன்று. அது திருப்பரங்குன்றத்தின் கிழக்கில் இருந்தது என்பதை ஒப்புக்கொள்கின்றார். ஆனால், பழைய மதுரை வையையின் தென்கரையில் இருந்தது என்றும் கூறுகின்றார். புதிய மதுரைதான் வையையின் தென்கரையில் இன்றிருக்கின்றது. பழைய மதுரையோ பரங்குன்றின் கிழக்கில் இருந்தது. பரங்குன்றிலிருந்து நாம் கிழக்கு நோக்கிச் சென்றால் அன்றைய மதுரையை இன்றைய மதுரையின் தெற்கு வாயிலைக் கடந்து செல்லும் அருப்புக்கோட்டைச் சாலையை ஒட்டிய பகுதியில்தான் பார்க்க வேண்டியிருக்கும். அன்றைய மதுரை இன்றைய மதுரைபோல் அளவிற் பெரிதில்லை. இன்றைய நான்கு வெளி வீதிக்குள் அமைந்த பரப்பளவுதான் அன்றைய மதுரையின் பரப்பளவு. இவ்வாறாயின் வையையாவது இப்பொழுது ஓடும் தடத்தில் ஓடாமல் இன்னும் தென்திசையில் ஓடி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வையையின் தென்கரையில் அன்றைய மதுரை இருந்திருக்க முடியும். வையையாறு இடம் மாறிவிட்டதாக வரலாறு உண்டா?

வையையாறு தடம்மாறிச் சென்றுவிட்டதாக எத்தகவலும் இல்லை. மயிலையாரும் அவ்வாறு கூறவில்லை. அப்படிக் கூறி இருந்தாலாவது வாதத்திற்காகவாவது வையையின் தென்கரையில் மதுரை இருந்ததாக ஒப்புக் கொள்ளலாம். வையையின் தென்கரையில்தான் மதுரை இருந்தது என்பதற்கு எதனை ஆதாரமாகக் கொள்கின்றார் என்றால், 'மதுரை மதில் மீது வையை வந்து மோதுகின்றது' எனக் கூறும் பரிபாடல், கலித்தொகைப் பாடல்களைத்தான். இந்நம்பிக்கைதான், திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களை, மதுரை வையையின் தென்கரையில் இருந்ததாகக் கொள்ள வைக்கின்றது. இவ்வாறு கொண்டால் வையையாறு இன்றுள்ள தடத்திலிருந்து தெற்கே ஐந்தாறு கல் தள்ளி ஓடியிருக்க வேண்டும் என்ற கருத்தையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டிவரும். ஆனால், வையை தடம் மாறி ஓடியதாகத் தகவல் ஏதும் இல்லை.

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், வையை மதுரைக் கோட்டை மதில்மீது வந்து மோதியது என்பதை மட்டுமே ஆதாரமாகக் கொண்டதனால்தான் இந்த முடிவிற்கு வந்தார் என்று எண்ணுகின்றேன். அவர் காட்டிய அப்பாடல்களை நாம் மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்தினால், கூர்ந்து நோக்கினால் ஒரு புதிய செய்தி கிடைக்கக்கூடும். இதற்கு நாம் திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள் காட்டிய பாடலை முழுமையாகக் காணவேண்டும்.

கார்முற்றி இணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து

நீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி இருநிலம்

தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்

நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்

போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன். கலி 67:15

(மேகங்கள் முதிர்ந்து மழை பெய்ததனால் தோட்டங்களிலுள்ள பூங்கொத்துக்கள் மலர, அதனைச் சூடிக் கொண்டு வருகின்ற வையை புலவர் பாடும் புகழினைப் பெற்றுள்ளது. மதுரை என்னும் பெருநிலப்பரப்பானது ஒரு மாலையால் முற்றுகை இடப்பட்டதுபோல நடுவில் அமைந்திருக்கப் பாண்டியன் கோட்டை மதில்மீது வையை நீர் மோதும். இந்த ஒரு மோதலைத் தவிர பகைவரின் மோதலைக் கண்டறியாத சிறப்பினை உடையது பாண்டியன் கோட்டை மதில்.)

இங்கே மதுரை நகரம் வையை நீரால் ஒரு மாலை போலச் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியைக் கூர்ந்து நோக்க வேண்டுகின்றேன். வையையாறு கமழ் தோட்ட மலர்களைச் சுமந்து வந்து அகழியை நிரப்புகின்றது. இதனால் அகழி முழுவதும் மலர்களாகவே காட்சியளிக்கின்றது. மலர்களைச் சுமந்து நின்ற அகழி இப்பொழுது எவ்வாறு தோற்றமளிக்கின்றது? ஒரு வட்ட வடிவ மாலை போலத் தோற்றமளிக்கின்றது. இம்மாலையால் சுற்றி வளைக்கப்பட்டதுபோல மதுரையும் மதுரைக் கோட்டையும் அமைந்திருந்தன என்கின்றார் கலித்தொகையாசிரியர். சிறு பூக்கள் நிரம்பிய ஆறுதான் என்பதை 'புனல்யாறு அன்று, பூம்புனல் யாறு' *(13:174)* என்று சிலம்பு கூறுவதையும் ஒப்பிட்டுக் காண்க.

அகழியில் நிரம்பி இருந்த நீர் ஊற்று நீரா? இல்லை ஆற்று நீர்தான். எந்த ஆற்று நீர்? வையையாற்று நீர்தான். இதனால்தான் நான்கு புறத்திலும் அகழியிலுள்ள வையையாற்று நீரால் மதுரை முற்றுகை இடப்பட்டுள்ளதாகவும், வையையிலிருந்து அகழிக்குக் கொண்டு வரப்பட்ட வாய்க்காலின் நீர் கோட்டை மதிலின் மீது சென்று மோதுவதாகவும் கலித்தொகையாசிரியர் கூறுகின்றார்.

இதே செய்தியைச் சிலப்பதிகாரம் உறுதி செய்கின்றது.

'வாழியோ வாழி வருபுனல் நீர் வையை

சூழும் மதுரையார் கோமான்தன் தொல்குலமே.'

29:14

நீர் வையை மோதும் என்று இளங்கோவடிகள் கூறவில்லை. நீர் வையை சூழும் என்றுதான் கூறுகின்றார். சூழும் என்றால் என்ன பொருள்? சுற்றி வளைக்கும் என்றுதான் பொருள். வையை நீரைத் தாங்கிய அகழிதான் மதுரையை சுற்றி இருந்தது என்ற கலித் தொகையாசிரியரின் கருத்தை இளங்கோவடிகள் ஒப்புக் கொள்கின்றார்.

மேலும், இப்பாடல் அடியை 'வையை வடுபுனல் நீர் மதுரையைச் சூழும்' எனத் தொடர்புபடுத்தி 'வையையினின்றும் வருகின்ற (கிளையாற்று) நீர் மதுரையைச் சூழும்' என்று பொருள் கொள்ள வேண்டும்.



வையையாறு இரண்டாகப் பிரிந்து மதுரையைச் சூழ்ந்து சென்றது என்று கூறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. மதுரை நகரம் ஆற்றிடைக் குறையாக (ஒரு தீவு போல அல்லது திருவரங்கம்போல) இருந்ததாக இலக்கிய, வரலாற்றுச் செய்திகள் எதுவும் இல்லை. ஆகவே சூழும் நீர் என்பதும் முற்றும் நீர் என்பதும் அகழியிலுள்ள நீரேயன்றி, ஆற்று நீரே வந்து மதிலில் மோதியதாகக் கூற முடியவில்லை. ஆகவே மதுரை வையையாற்றின் தென்கரையில் அமைந்திருந்தது என்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. இதனால்தான் வையையின் தென்கரையைச் சென்றடைந்ததும் கண்ணகி, கவுந்தி, கோவலன் ஆகியோர் ('அருமிளை உடுத்த அகழி சூழ் போகி', சிலம்பு 13:183) கடத்தற்கரிய காவற்காட்டை ஆடையாக உடுத்த அகழியைச் செல்ல வேண்டிய இலக்காகக் கருதிச் சென்றனர் என்கின்றார் இளங்கோவடிகள்.

மற்றும் ஒன்று, அகழிக்கு உட்பகுதியில் ஒரு மதிலும் வெளிப் பகுதியில் ஒரு மதிலும் இருந்ததாகவும், புற மதிலுக்கும் அக மதிலுக்கும் இடையில்தான் புறஞ்சேரி அமைந்திருந்ததாகவும் (மு.நூ.பக்கம் 115) திரு. மயிலையார் கூறுகின்றார். ஆனால், சிலம்பு மூலத்தில் இப்படியொரு செய்தி கிடைக்கவில்லை. உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்தான் 'புறஞ்சிறை மூதூர்' (13:196) என்ற தொடருக்கு உரை எழுதுமிடத்து 'மூதூர்ப் புறமதில் இடத்ததாகி' என்று எழுதுகின்றார். புறமதில் இருந்தால் அகமதிலும் இருக்குந்தானே என்ற அனுமானத்தின் மீது இரு மதில்கள் இருந்ததாக எழுதினார் போலும். இரண்டு மதில்களுக்கும் இடையில்தான் புறஞ்சேரி இருந்தது என்பது உண்மையானால் கோவலன் புறஞ்சேரியிலிருந்து மதுரையைக் காணச் சென்றபோதும், மாதர் அடைக்கலமாகப் பெற்ற கண்ணகி, கோவலனை அழைத்துக் கொண்டு மதுரை நகருக்குட் சென்றபோதும் அகழியை மட்டுமே அவர்கள் கடந்து சென்றதாக இளங்கோவடிகள் கூறியிருக்க வேண்டும். ஆனால், அவரோ? 'இளை சூழ் மிளையுடன் வளைவுடன் கிடந்த இலங்கு நீர்ப் பரப்பினை' (13:62, 63) கடந்தான் என்றும், மாதரியும் பிறரும் 'மிளையும் கிடங்கும்' (15:207) கடந்து சென்றனர் என்றும் கூறுகின்றார். இவ்வாறு இளங்கோவடிகள் கூறுவதனாலேயே புறஞ்சேரி இருமதில்களுக்கும் இடையில் அமைந்திருக்கவில்லை என்பதும், அது மிளைக் காட்டுள்தான் இருந்தது என்பதும் தெளிவாகும்.

கொங்கையின் விளைத்த கொடு நெருப்பில் மதுரை மாநகரம் பற்றி எரிந்தபோது அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிகள் விரிவாகக் கூறுகின்றார். அப்பொழுது

கறவையும் கன்றும் கனல்எரி சேரா,

அறவை ஆயர் அகன்தெரு அடைந்தன,

மறவெங் களிறும் மடப்பிடி நிரைகளும்

விரைபரிப் புரவியும் புறமதிற் பெயர்ந்தன. *22:115118*

என்று கூறுகின்றார். தீமையறியாதனவாகிய கறவைகளும் கன்றுகளும், தீமையில்லாத வர்களாகிய ஆயர்சேரியை அடைந்தன என்றும், மறக்குணம் மிகுந்த களிறுகளும், பிடிகளும், குதிரைகளும், மதிலின் புறத்தே சென்றன என்றுதான் திரு. நாட்டார் அவர்கள் உரை எழுதுகின்றார். மதிலின் புறத்தே சென்றன என்பது மதிலுக்கு வெளியே என்றுதான் பொருள்படும். அகமதில் புறமதில் என்று இரண்டு மதில்கள் இருந்ததாக நாட்டார் கருதியிருந்தால் புறமதிலின் புறத்தே சென்றன என்றுதான் கூறியிருப்பார். அவ்வாறு கூறாமையே இரண்டு மதில்கள் இருந்தன என்பதைப் புறக்கணித்து விடுகின்றது.

காவற்காட்டுள் மூங்கிற் புதர்கள் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்கின்றது சிறந்த அரசியல் நூலான சுக்கிர நீதி. 'நெருங்கிய முட்கள் சூழ்ந்த மூங்கிற் புதர் கூட்டமாக இருப்பின் அதனைக் களைதல் (பகைவர்) இயலாததொன்றாம் (அக்4. பிர7. சூத்244) என்று கூறுகின்றது. இளங்கோவடிகளும் மிளைக் காட்டுக்குள் மூங்கில் புதர்கள் சூழ்ந்த இடத்தில்தான் புறஞ்சேரி இருந்தது என்று கூறுவது கொண்டும் நாம் ஒரு முடிவிற்கு வரலாம். மூங்கிற் புதர்களும் புறஞ்சேரியும் மிளைக் காட்டுள்தான் இருந்தனவே தவிர இரண்டு மதில்களுக்கும் இடையில் அவை அமைந்திருக்கவில்லை என்பதே அம் முடிவு. இவ்வாறு நாம் ஒரு முடிவிற்கு வருகின்றபோது மதுரை வையையாற்றின் தென்கரையில் இருந்து மதுரையின் கிழக்கு வாயிலை நோக்கி நடந்து வந்தபோது கண்ணகி, கோவலன்,

கவுந்தி ஆகியோர் அகழியையோ, அகழியிற் பூத்த மலர்களையோ, அவற்றில் மொய்த்த வண்டுகளையோ காணவில்லை என்பதும், தொலைவில் இருந்துதான் கோட்டை மதிலில் அசைந்தாடிய கொடியைக் கண்டனர் என்பதும், இரண்டு மதில்களுக்கும் இடையில் அவர்கள் புறஞ்சேரியைப் பார்க்கவில்லை என்பதும், மிளைக் காட்டுள் இருந்த மூங்கிற்புதர் நடுவே அமைந்த புறஞ்சேரியில்தான் தங்கினர் என்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

திரு.மயிலை சீனி. வேங்கடசாமியின் மற்றுமொரு கருத்தையும் நாம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. மதுரைக்கு மூன்று வாயில்கள்தாம் உண்டு. வடக்கு வாயில் எப்பொழுதும் அடைபட்டே இருந்தது. ஏனென்றால் வடக்கில் வையையாறு மதுரையின் கோட்டை மதிலை ஒட்டிச் சென்றதுதான் காரணம் என்று கூறுகின்றார். ஒரு மாலைபோல அகழி மதுரையைச் சூழ்ந்திருந்தது என்ற சிலம்பும் கலித்தொகையும் கூறிய பிறகு அகழியோ மிளைக் காட்டை ஆடையாக உடுத்திருந்தது என்று சிலம்பு தெளிவாக்கிய பிறகு வடக்கில் வையையாறு மதிலை மோதிச் சென்றது என்று கூறுவது பொருத்தமானதாக இல்லை.

இது மட்டும் அன்று. வடக்கு வாயில் அடைபட்டிருந்ததனால்தான் வடதிசையிலிருந்து வந்த கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியோர் மதுரையின் கிழக்கு வாயில் வழியாக மதுரைக்குச் சென்றனர் என்றும், இதற்கு 'கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு' (சிலம்பு 23:182, 183) என்ற பாடல் அடிகளை ஆதாரமாக்கியும் காட்டுகின்றார். வடக்கிலிருந்து வருபவர்கள் வடக்கு வாயிலில் நுழைவதுதான் இயற்கை. ஆனால், அவர்கள் வடக்கு வாயிலில் நுழையாது கிழக்கு வாயிலில் நுழைந்ததனால் வடக்கு வாயிலே இல்லை என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. வடக்கில் கோட்டையை அடுத்து வையையே ஓடவில்லை என்றால் வடக்கு வாயில் ஏன் அடைபட்டிருக்க ,வேண்டும்? வடக்கில் மதிலை ஒட்டி வையை ஓடாமையாலும் அகழியைச் சுற்றி மிளைக்காடுதான் இருந்தது என்பதனாலும் வடக்கு வாயில் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தும் அவர்கள் வடக்கு வாயிலில் நுழையாது கிழக்கு வாயிலில் நுழைந்ததற்கு வேறு காரணம் இருக்க வேண்டும். அதனை இனிக் காண்போம்.

மதுரை நகரம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்துவிட்டது என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்கின்றனர். புதியதாக உண்டாக்கப்பட்ட மதுரையும் பழைய மதுரையின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலும் நகரங்களுக்கெல்லாம் நான்கு வாயில்கள் வைப்பது என்பது காலங்காலமாகத் தொடர்ந்து வரும் செய்திதான். அதன் எச்சத்தைத்தான் இன்னும்கூட நகரங்களின் நாற்புறத்தும் வளைவுகளை (Arch) நாம் காணுகின்றோம். மதுரையில் இன்றும்கூடக் கிழக்கு வாசல் (புதிதாக அமைக்கப்பட்ட மதுரையில்) இருக்கிறது. தெற்கு வாயிலும் இருக்கின்றது. நான் மேற்கு வாயிலில் வெளியேறினேன் என்று கண்ணகி கூறியிருந்தாலும் இன்று நாம் புதிய மதுரையில் மேற்கு வாயிலைக் காண முடியவில்லை. ஆனால் இன்றும்கூட மதுரை மக்கள் பழைமை போற்றும் பண்பினராகி வடக்கு வெளி வீதியை வடக்கு வாயில் என்றே அழைக்கின்றனர். மக்களின் பாரம்பரிய உணர்வு பழைய மதுரையில் வடக்கில் வாயில் இருந்தது என்பதை உறுதி செய்கின்றது.

வடதிசையிலிருந்து வருகின்ற கண்ணகியும் கோவலனும், எளிதாகவும் அண்மையிலும் அமைந்துள்ள வடக்கு வாயிலில் நுழைவதுதான் இயற்கை. இவ்வெளிமையான செயலைச் செய்யாது சுற்றிக் கொண்டு கிழக்கு வாயிலை நோக்கிச் சென்றார்கள் என்றால் வடக்கு வாயிலில் நுழைய முடியாதவாறு ஏதேனும் தடையிருந்திருக்க வேண்டும். அதனை இனிக் காண்போம்.

'யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்'
மதுரைக் காஞ்சி 359

'ஆறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்'
நெடுநல்வாடை 30

மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் ஒரு நீண்ட, நெடிய, அகன்ற தெருவின் பொதுத் தோற்றம் எப்படி இருக்கும் என்பதனைத் தெரிவிக்கின்றன. 'ஆறு கிடந்தன்ன' என்று சொல்வதனாலேயே இதில் ஆற்றின் இயக்கம் பற்றிப் பேசவில்லை என்றும்,

அது தொலைவில் இருந்து காண்பார்க்கு எத்தகைய தோற்றம் அளிக்கும் என்பதையும் மட்டுமே தெரிவிக்கின்றது என்றும் கொள்ள வேண்டும். இங்கே 'கிடத்தல்' என்பது எதைக் குறிக்கின்றது? நீரின்றி வறண்டு கிடக்கும் நீரோடிய தடத்தைத்தான் என்று அறிகின்றோம். அதுதான் இயக்கமற்று இருக்கும் தெருவின் பொதுத் தோற்றத்திற்கு ஒத்ததாகவும் இருக்கும். தெருவின் பொதுத் தோற்றம்பற்றி இப்படிப் பேசும் மதுரைக் காஞ்சி மதுரையின் நான்கு வாயிலைப் பற்றி வேறுவிதமாகப் பேசுகின்றது.

'வையை அன்ன வழக்குடை வாயில்' மதுரை 356

வையையாறு எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கின்றதோ அதுபோலவே மதுரை நகர வாயில்கள் இயங்கிக் கொண்டிருக்கும் என்று பேசப்படுகிறது. வழக்கு என்றால் அது நீரின் இயக்கத்தைக் குறிப்பது. ஆகவே வையையின் இயக்கம் போன்று வாயில்கள் இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும் என்கின்றார் மாங்குடி மருதனார்.


ஆற்று நீர் வழக்கு என்பது ஒரு வழிப் போக்கினை உடையது. எதிர் மறுத்துச் செல்லாதது. வையை நீர் வழக்கன்ன வாயில்கள் என்பதனால் இவ்வாயில்கள் ஒருவழிப் போக்கினை உடையதாக இருந்திருக்க வேண்டும். சில வாயில்கள் உள் நுழையும் ஒருவழிப் பாதையாகவும், சில வாயில்கள் வெளியேறும் ஒருவழிப் பாதைகளாகவும் இருந்திருக்கும் என்று எண்ணுகிறேன். வடதிசை வாயில் வெளியேறும் ஒருவழிப் பாதையாக இருந்திருக்கும்போலும். இதனால்தான் அருகிலுள்ள வடக்கு வாயிலில் நுழைய முடியாமல் நுழைவிற்கு அனுமதிக்கப்பட்ட கிழக்கு வாயில் வழியாக நுழைகின்றனர். இதனால்தான் கண்ணகி கீழ்த் திசை வாயிலில் நுழைந்தேன், மேற்றிசை வாயிலில் வெளியேறினேன் என்று கூறினாள் போலும்.

கீழ்த்திசையில் நுழைந்தவள் மேற்றிசையில் வெளியேறியதனால் நுழைவும் வெளியேற்றும் எதிர்எதிர்த் திசைகளாக இருக்குமாறு அமைத்திருப்பார்கள் போலும். காவல் அமைந்த பெருநகரங்களின் வாயில் ஒருவழிப் பாதையாக அமைந்திருந்தால்தான் அவ்வழியே வருவோரையும் வெளியேறுவோரையும் மிகச் சரியாகக் கண்காணிக்க முடியும். ஒற்றர்கள், குற்றவாளிகளை எளிதில் அடையாளம் காண வேண்டுமானால் அது ஒருவழிப் பாதையாகவே இருக்க வேண்டும். ஏனெனில் எதிரும் புதிருமாகச் செல்லும் ஒரு கூட்டத்தில் ஒரு மனிதனைக் கண்காணிப்பதைவிட ஒருவழிப் பாதையில் கண்காணிப்பது எளிதானது. ஒருவழிப் பாதையில் யாரையும் எளிதில் அடையாளம் காணமுடியும். பகைவர்களைக் கண்காணித்தல் என்ற நோக்கில் ஒருவழிப் பாதை என்ற அமைப்பை உருவாக்கினார்கள் போலும். இதனால்தான் 'வையை யன்ன வழக்குடை வாயில்' என்று மதுரைக் காஞ்சி பேசுகின்றது போலும்.

உரோமாபுரி நான்கு வாயில்களையுடைய பெருநகராக அமைந்திருந்தது என்றும், அதில் உள் நுழைவோர்க்கும், வெளியேறுவோர்க்கும் தனித்தனி வாயில்கள் இருந்தன என்றும் வரலாற்றை முதற் தெரிவிக்கின்றதை ஈண்டு ஒப்புநோக்கும் கீழ்த் திசை வாயிலும் தென்திசை வாயிலும் நகருட் செல்வோர் நுழையும் வாயிலாகவும், மேற்றிசை வாயிலும் வடதிசை வாயிலும் நகரினின்றும் வெளியேறும் வாயில்களாகவும் அமைந்திருக்க வேண்டும். இதனால்தான் கண்ணகியும் கோவலனும் வடதிசை வாயிலை நோக்கிச் செல்லாமல் சற்றுத் தொலைவு கடந்து கீழ்த்திசை வாயிலில் நுழைந்தனர் என்று அறிகின்றோம்.

இன்றைய மதுரையின் ஆற்றுப் பாலத்திலிருந்து நேர் தெற்கில் ஏழு அல்லது எட்டுக் கல் செல்வோமேயானால் அந்த இடம் திருப்பரங்குன்றத்தின் நேர் கிழக்கில் இருப்பதை அறியலாம். வையையின் தென்கரையை அடைந்த கண்ணகி, கவுந்தி, கோவலன் ஆகியோர் காவற்காட்டையும் புற்றணி கழனி, பொழில், வெள்ள நீர்ப் பண்ணை, விரிநீர் ஏரியையும் கடப்பதற்கு ஏழெட்டுக் கல் நடந்தேயிருப்பர். இவ்வாறு கொள்ளும் போது பழைய மதுரை நகரம் பரங்குன்றின் கிழக்கில் இருந்ததாக முருகாற்றுப் படையும், அகநானூறும் கூறுவது முற்றிலும் உண்மையே என்று அறிவோம்.

கோவலன் கொலையுண்ட பிறகு பழைய மதுரைவாழ் மக்கள் புதிய மதுரையைப் படைத்திருக்க வேண்டும். இப்புதிய மதுரைதான் வையையின் தென்கரையில் அமைந்து இன்று



வரை பெயர் மாறாமல் இருக்கின்றது. முருகாற்றுப் படையும், அகநானூறும் பழைய மதுரையின் அமைவிடம் பற்றிக் கூறிய செய்தியைச் சிலப்பதிகாரம் நிகழ்ச்சிகளைக் கொண்டு மெய்ப்பிப்பது வியக்கத்தக்கதாக உள்ளது.

அக்கால மதுரையின் அருகில் வையை ஓடவில்லை என்றால் சிலம்பில் ஆய்ச்சியர் குரவை முடிவில், துன்பமாலைத் தொடக்கத்தில்,

ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைகாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடிஒத்தத்
தூவித் துறைபடியப் போயினாள். மேவிக்
குரவை முடிவில்ஓர் ஊரரவம் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்.

சிலம்பு 18:17

என்று ஆயர் முதுமகள் வையையில் புனலாடவும் திருமாலை வழிபடவும் சென்றாள் என்பதும் அங்கே கோவலன் கொலை பற்றிய செய்தியை அறிந்து விரைந்து வந்தாள் என்பதும் பொருந்துமா என்றொரு தடை எழுப்பப்படலாம்.

ஆம், இங்கேயும் ஒரு சிக்கல் இருக்கவே செய்கின்றது. விடிவதற்கு முன்னர் ஒரு பெண் ஆற்றில் நீராட வரவேண்டுமென்றால் அந்த ஆறு அண்மையில் இருந்தால்தானே சாத்தியம் எனக் கேட்கக் கூடும். வையை ஆறு மேற்கில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்வதாகவும், அது மதுரையில் இருந்து ஐந்தாறு கல் தொலைவில் விலகிச் செல்வதாகவும் எடுத்துக்கொண்டு அதே நேரத்தில் மேற்கில் இருந்து மதுரை அகழிக்கு நீர் வர நீர்க்கால் ஒன்று அமைந்திருந்ததாய் கொள்ளவேண்டும். அவ்வாராயின் ஆயர் முதுமகள் நீராடச் சென்றது வையையில் அன்று, அவ் வையையிலிருந்து அகழிக்கு நீர்வந்த நீர்க்காலில்தான் என்று அறிக. அந்நீர்க்கால்தான் மதுரை நகரின் அண்மையில் இருந்தது. அது வையையிலிருந்து பிரிந்து வந்த கிளை ஆதலின் அதனையும் வையை என்றே அழைத்திருப்பர்.

இதனை ஏற்கவில்லை என்றால் வையையின் தென்கரையில் இருந்து கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியோர் எவ்வளவு தூரம் நடந்து கடந்தார்களோ அவ்வளவு தூரம் நடந்து கடந்துதான் ஆயர் முதுமகள் வையை அடைய வேண்டியிருக்கும். விடிவதன் முன்னர் இருளில் ஒரு பெண் ஐந்தாறு கல் வலிய காட்டரணைக் கடந்து நீராட வந்தாள் என்பது நம்ப முடியாததாக உள்ளது. ஏழெட்டுக்கல் நடந்தால்தான் நீராட முடியும் என்ற நிலை மதுரையில் இருந்தது என்று கூறுதல் பொருத்தமற்றது. இதனால்தான் ஆயர் முதுமகள் நீராட வந்தது மதுரை அகழிக்கு நீர் வரும் கிளையாறு என்று கூறுகின்றேன். ஆதலின் ஆயர் முதுமகள் நீராட வந்தது வையை அன்று, அகழிக்கு நீர் கொணரும் வையையின் கிளையே என்று அறிய வேண்டுகின்றேன்.

இதனை ஏற்றுக் கொள்ளாது யாரேனும் அன்றைய மதுரை அருகில்தான் வையை ஓடியது என்று வலியுறுத்துவார்களேயானால் கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியோர் ஆற்றைக் கடந்த பிறகு ஏழெட்டுக் கல்

தொலைவுக்கு நடந்து சென்றது ஏன் என்ற வினாவிற்கு விடையளிக்க வேண்டிய இடர்ப்பாடு ஏற்படும். இச்சிக்கலைத் தீர்ப்பது அவ்வளவு எளிதில்லை. பழைய மதுரையின் அருகில் வையை ஓடியிருந்தால், அங்கிருந்து கோவலன், கண்ணகி ஆகியோர் ஏழெட்டுக் கல் தெற்கில் நடந்து சென்றிருந்தால் மதுரை நகரம் பரங்குன்றின் நேர் கிழக்கில் இருக்க மாட்டாது. வேறு எங்கே இருக்கும் என்கிறீர்களா? பரங்குன்றின் தென் கிழக்கிலேதான் மதுரை இருக்க வேண்டும். இதனால்தான் சொல்கின்றேன். பழைய மதுரை பரங்குன்றின் கிழக்கில்தான் அமைந்திருந்தது. மதுரையின் வடக்கில் ஏழெட்டுக்கல் தொலைவில்தான் வையை ஓடியது. வடக்கு வாயில் அடைபட்டுக் கிடக்கவில்லை. அது எப்போதும் நகரிலிருந்து வெளியேறுவோர் வாயிலாகவே இயங்கிக் கொண்டிருந்தது. கோட்டை மதிலை ஒட்டி வடக்கில் வையை ஓடவில்லை. மதுரையின் மேற்குப் பகுதியில் இருந்து போந்த வையையின் கிளையாறுதான் அகழியில் பாய்ந்தது. அந்த நீர்தான் கோட்டை மதிலை முற்றியது. இந்தக் கிளையாற்றில்தான் ஆயர் முதுமகள் நீராடச் சென்றாள் என்று கொண்டால் எல்லாக் குழப்பங்களும் அகன்றுவிடும்.

மற்றுமோர் ஐயத்தைச் சிலர் இங்கே எழுப்பக்கூடும். கோவலன் முதன்முறையாக மதுரைக்குட் சென்றபோது கடைகழி மகளிரின் பொழுது போக்கைக் கண்டு செல்லுமிடத்து

'குடகாற்று எறிந்து கொடிலடங்கு மறுகின்

கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு

வருபுனல் வையை மருதோங்கு முன்துறை

விரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை

ஓங்குநீர் மாடமொரு நாவாய் இயக்கி

பூம்புனை தழீஇ புனலாட்டு அமர்ந்து' *14:7075*

என வரும் இப்பகுதியும் வையையின் கிளையாற்றில்தான் நிகழ்ந்ததா? என்றொரு கேள்வி வரும். இதுமட்டும் அன்று. பரிபாடலில் வரும் நீர் விளையாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் எங்கே நிகழ்ந்தன. அதுவும் இந்தக் கிளையாற்றில்தானா? என்று மேலும் ஒரு வினா எழுப்பப்படக் கூடும். இவை எல்லாம் நகருக்கு வெளியே அமைந்த திருமருதந்துறை என அழைக்கப்படும் இடத்தில்தான் நடந்தன. 'ஓங்குநீர் மாடமொடு நாவாய் இயக்கி' என்பதனால் இவற்றை அகழிக்கு நீர் கொணரும் வாய்க்காலில் ஒட்ட முடியாது ஆதலின் வையையில்தான் நடந்திருக்க வேண்டும்.

கோவலன் நகருக்குள் நுழைந்த பின்னர்த்தான் இவற்றை எல்லாம் காண்கின்றான். அவ்வாறாயின் நகரின் மையப் பகுதியில் வையை ஓடியது என்றும் அதில்தான் நாவாய் இயக்கினர் என்று கொள்ளலாமா என்றொரு வினாவும் எழலாம். கோவலன் கடைகழி மகளிரின் பொழுது போக்கைக் கண்டதாகக் கூறும் பகுதி முழுவதும் கற்பனையானதுதான். அங்கே அம்மகளிரின் காலைப் பொழுதுபோக்கு, நண்பகற் பொழுதுபோக்கு, அந்திப் பொழுதுபோக்கு மட்டும் கூறப்படவில்லை. அவர்கள் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் என்னும் காலங்களின் நிகழ்ச்சிகளையும் கூறுகின்றனர். இவற்றை எல்லாம் கோவலன் கண்டிருக்க முடியாது? அவன் மதுரை நகருக்குட் தங்கியிருந்ததெல்லாம் ஐந்தாறு மணிக் காலந்தான். ஒரு தொடர்பான செய்திகளைப் பாடும் பொழுது எல்லாவற்றையும் ஒரு சேரக் கொடுத்துவிட வேண்டும் என்ற கவிஞனின் விருப்பந்தான் இவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். தன் கற்பனையால் அம்மகளிர் திருமருதந்துறையில் (வையையாற்றில்) தன்னுள்ளம் கவர்ந்தாரொடு ஆடிய ஆட்டங்களை எல்லாம் இங்கே வரிசைப்படுத்தி மொழிகின்றாரேயன்றிக் கோவலன் இவற்றை எல்லாம் கண்டான் என்று கூறுவதற்கில்லை. கார் காலம் தொடங்கி இளவேனில் வரை உள்ள பத்துமாத நிகழ்வுகளைக் கோவலன் எப்படிக் கண்டிருக்க முடியும். ஆதலின் ஈண்டுக் கூறப்படுவன அனைத்தும் புலவனின் கற்பனையே யன்றி உண்மை நிகழ்வன்று. இது கற்பனைதான் என்றால் வையையின் திருமருதந்துறை நகருக்குள்ளோ நகரினை அடுத்தோ அமைந்திருக்கவில்லை என்பதும் நகரின் கிழக்கு வாயிலை விட்டு விலகி எட்டுக்கல் தொலைவில்தான் இருந்தது என்பதும் போதரும். திருமருதந்துறை அமைந்திருந்த சூழல் பற்றிச் சங்க இலக்கியங்கள் என்ன கூறுகின்றன என்பதை இனிக் காண்போம்.

'திசை திசை தேனார்க்கும் திருமருத முன்துறை' என்கின்றது (கலி. 26:13). நான்கு திசையிலும் தேனீக்களின் ஆரவாரம் மிகுந்திருந்தது என்றால் அங்கே ஏராளமான மலர்கள் பூத்து நின்ற அடர்ந்த சோலைகள் இருந்திருக்க வேண்டும். மேலும் 'திருமருதமுன்துறை' என்பதனால் உயர்ந்தோங்கிய மருத மரங்கள் சுற்றிலும் அமைந்திருக்க, இடையிடையே மக்கள் பொழுது போக்கும் முற்றங்களைப்போல இடைவெளிகள் அமைந்திருக்க வேண்டும். திருமறை முன்துறையின் முற்றங்கள் எவ்வாறிருந்தன என்பதைப் பரிபாடல் திரட்டு இவ்வாறு கூறுகின்றது :

'மணிகளை அணிந்த யானைகள் மீது ஏறி மைந்தரும் மடவாரும் தத்தம் குழாத்தொடு அங்கே வந்து குழுமினர். யானைகளும் தேரும் திருமருதந்துறையில் குழுமி நின்றன.'

பரிபாடல் திரட்டு 67-72

யானைகள், தேர்கள் புடைசூழ அங்கே பல குழுவினர் வந்து குழுமி இருந்தனர் என்றால் வையையாற்றின் கரையில் விசாலமான முற்றங்கள் பல அமைந்திருக்க வேண்டும். இதனைச் சிலம்பும்கூட 'மருதோங்கு முன்றுறை' என்று ஒப்புக் கொள்கின்றது. இத்தகைய விசாலமான முற்றங்களும், தேனீக்களின் ஆரவாரம் எழுகின்ற விரிந்தகன்ற சோலைகளும் யானை தேர்க் கூட்டங்கள் தங்குவதற்கேற்ற இடங்களும் (மதுரையின் மையப் பகுதியில் வையை ஓடியிருந்தால்) மதுரையுள் இருந்திருக்க முடியுமா?

பரிபாடல் ஏழாம் பாடல் தருகின்ற செய்தியையும் பார்ப்போம். 'யாழிசையும் கண்டப்பாடலும்' எழ அவற்றின் சுருதியை வங்கியம் அளந்து நிற்ப முழவானது முழங்க, மகளிர் ஆடலைத் தொடங்க அப்பேரொலியோடு கரையைப் பொருது வழிந்தோடும் வையையாற்றின் ஆர்ப்பொலியும் சேர்ந்து கொள்ள அது மின்னலொடும் இடியோடும் பெய்கின்ற மழையின் முழக்கத்தைப் போல இருக்கும். வையையின் போக்கு அச்சம் தருவதாக (போநீர்வையை) அமைந்த திருமருதமுன்துறை. (பரிபாடல் 7:7584) பேஅச்சம்).

மதுரை நகருக்குள் இந்த ஆறு ஓடியது என்பதனை அதன் சுற்றுச் சூழல் பற்றிய விளக்கமும், அச்சந்தரும் வையை என்ற புனைவும் மறுத்து விடுகின்றன. அச்சந்தரும் நீர்ப் போக்கை நகரத்தினுள் அனுமதித்தால் வெள்ளம் வருகின்ற பொழுதெல்லாம் நகரத்திற்கு அழிவு வந்தே தீரும். இத்தகைய அழிவை எந்த அரசும் நிரந்தரமாக அமைத்துக் கொள்ளாது. ஆதலின் கோவலன் மதுரையுட் சென்று கண்டவைகளைக் கூறும் பகுதியுள் திருமருதன் துறையில் கடைகழி மகளிரின் செயல்களாக வருவன எல்லாம் ஊருக்கு வெளியே அமைந்த திருமருதன் துறையில், என்றோ ஒரு நாள் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் தாமேயன்றிக் கோவலன் அப்பொழுது கண்ட காட்சியன்று என்பதனை அறிய வேண்டுகின்றேன். இவற்றை நாம் அறிகின்றபோது வையை மதுரை நகருக்குள்ளோ, நகரை ஒட்டியோ ஓடவில்லை என்பது தெளிவாகத் தெரிந்துவிடும். அதுமட்டும் அன்று, வையை மதுரையில் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் தனித்தனி வாயில் இருந்தன என்பதும் மதுரை மாநகரம் இன்றிருப்பதுபோலப் பரங்குன்றின் வடகிழக்கில் இல்லாமல் நேர் கிழக்கில்தான் அமைந்திருந்தது என்பது தெளிவுபடும்.

வெளியேறும் வாயில்களாக மேலை வாயிலும் வடக்கு வாயிலும் இருந்திருக்குமானால் தருமருதந்துறை மதுரையின் மேற்கிலோ வடக்கிலோதான் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் திருமருதந்துறைக்கு விளையாட்டுக்குச் செல்வோர் இந்த இருவாயில்கள் வழியாகத் தானே போக முடியும். மேலும் மேற்கில் இருந்தது என்பதைவிட வடக்கில்தான் திருமருதந்துறை இருந்தது என்பதுதான் பொருத்தமானது. ஏனெனில் தற்பொழுது வையையாறு மதுரையை ஒட்டி வந்தபிறகு தெற்கு நோக்கித் திரும்பி விடுவதைப் பார்க்கின்றோம். அது தொடர்ந்து கிழக்கு நோக்கி ஓடவில்லை. காரணம், கிழக்கில் நிலம் மேடாக இருப்பதுதான். ஆற்றில் எங்கே வளைவு வருகின்றதோ அதன் மேற்பகுதியில் ஆறு அகன்றும் ஆழம் கொண்டும் இருந்திருக்கும். இதனால்தான் பரிபாடல் 'அச்சம் தரும் வையை' என்றுபேசுகின்றது போலும். எனவே மதுரையின் வடபகுதியில்தான் திருமருதந்துறை அமைந்திருந்தது என்று கூறினால் அது ஏற்கத்தக்கதே.

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் எந்த இடத்தில் வையைக் கடந்தார்களோ அந்த இடம் திருமருதந்துறைக்கு அருகில் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் அந்த இடத்தில்தான்,

“பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்

அரிமுக அம்பியும் அருந்துறை இயக்கும்

பெருந்துறை” *13:176178*

அமைந்திருந்ததாகச் சிலம்பு கூறுகின்றது. ஆதலின்,

இது மட்டும் அன்று. கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியோர் ‘இப்பெருந்துறை வழியே நாம் செலல் வேண்டா என்றும், தனியே ஒரு புணையில் ஏறிக் கடப்போம் என்றும் முடிவு செய்ததும், அதன்படியே புணையில் ஏறிக் கடந்ததும் ஏன் என்றொரு வினாவை எழுப்பினால் இப்படியோர் விடை கிடைக்கக் கூடும். என்ன அது?

‘கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியோர் மதுரை வையையாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தது முதுவேனிற் காலத்தில் என்பதை,

‘ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து

அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று’

என வரும் சோதிட வார்த்தையால் அறிகின்றோம். அவ்வாறாயின் முதுவேனிற் காலத்தில் திருமருதந்துறையில் ஆடவரும் மகளிரும் நீர் விளையாட்டில் ஈடுபட்டு இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்திருப்பர். இத்தகைய இன்பக் காட்சிகளைத் தாம் காண்பது தக்கதன்று என்பதனால்தான் அவர்கள் பரிமுக அம்பியிலும் கரிமுக அம்பியிலும் ஏறிச் செல்ல விரும்பாது, அத்துறை (திருமருதந்துறை) இருந்த பக்கமே தலைகாட்டாது புணையில் ஏறித் தனியே சென்றனர் என்று கூறினால் அது முற்றிலும் பொருத்தமானதுதான். (அரிமுக அம்பியும் பரிமுக அம்பியும் திருமருதந்துறையில்தான் கிடைக்கும். இதற்காக அங்கே செல்வது தம் நிலைக்கு ஏற்றதில்லை என்று அவர்கள் எண்ணியிருக்க வேண்டும்). கவுந்தியும் மற்றவர்களும் இவ்வாறு ஒதுங்கிச் செல்வதே இதுதான் திருமருதந்துறை என்பதைக் காட்டிக் கொடுத்து விடுகின்றது.

அது சரி; அந்த இடம் (திருமருதந்துறை) தற்கால மதுரையில் எந்த இடமாக இருக்கக்கூடும் என்றால், இன்றைய ஆற்றுப் பாலமோ, அதற்குச் சற்று மேற்கிலோ அந்த இடம் அமைந்திருக்க வேண்டும். ஏனென்றால் ஆற்றுப் பாலத்தை ஒட்டியே வையை தெற்கு நோக்கித் திரும்பி விடுகின்றது. ஆகவே இன்றைய ஆற்றுப் பாலத்தை ஒட்டிய இடமே திருமருதந் துறையாக இருந்திருக்க வேண்டும்.

கவுந்தி கண்ணகி ஆகியோர் வடக்கு வாயிலில் நுழையாது கிழக்கு வாயில் வழியாகச் சென்றதற்கு வாயில்களின் ஒருவழிப் பாதை அமைப்பு காரணமாக இருக்கலாம். அன்றியும் துறவு பூண்ட கவுந்தியும், இன்பநுகர்வுக்கு வாய்ப்பில்லாது தொடர்பயணம் மேற்கொண்ட கண்ணகி, கோவலன் ஆகியோரும் திருமருதந்துறையின் இன்ப விளையாட்டுக் காட்சிகளைக் காணுதல் முறையன்று என்பதும் காரணமாக இருக்கலாம். இதில் ஏதோ ஒன்றுதான் வடக்கு வாயிலில் நுழையாது கிழக்கு வாயிலில் நுழைந்து சென்றதற்குக் காரணமாக இருக்க முடியும். வடக்கு வாயில் எப்போதும் அடைந்தே கிடந்தது என்ற கூற்று ஏற்கத் தக்கதில்லை.

திருமுருகாற்றுப் படையும் அகநானூறும் மதுரையின் மேற்கில் பரங்குன்றும், பரங்கின் கிழக்கில் மதுரையும் அமைந்திருந்தன என்று கூறிய ஒரு செய்தியை, வேறு ஆதாரங்களை அந்நூல்கள் தரவில்லை எனினும், சிலப்பதிகாரம், கண்ணகி, கவுந்தி, கோவலன் ஆகியோரை வையையின் (வடகரையில் இருந்து தென்கரை சேர்ந்த பின்) தென்கரையில் இருந்து புறஞ்சேரிக்கு நடக்க வைத்தும், அவர்கள் வழியில் கண்டவற்றையும், கடந்தவற்றையும் நாம் அறியுமாறு செய்வித்தும், பரங்குன்றின் கிழக்கில்தான் மதுரை இருந்தது என்பதையும் வையையின் தென்கரையில் மதுரை அமைந்திருக்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்திய இளங்கோவடிகள் வரலாற்றிற்கு வழங்கிய கொடை மிகப் பெரிது.

■